**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**OS No.25/2022**

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிவாசகம் | தந்தை பெயர் | தியாகராஜன் |
| கிராமம் | கந்தர்வகோட்டை | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 81 | தொழில் | பஞ்சாயத்து அலுவலக ஊழியர் ஓய்வு |

நாள் : 23.02.2024
வா.சா.2
<u>குறுக்கு விசாரணை:-</u>

1) தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 361/16, விஸ்தீரணம் 0.02.50 ஏர்ஸ், அதன் பழைய சர்வே எண் 188/2. சர்வே எண் 316/16 இரத்தனசாமி செட்டியாருக்கு சொந்தம் என்பதை எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அனுபவத்தில் இருந்ததால் எனக்கு தெரியும், ஆவணங்கள் எதையும் பார்த்தேனா என்றால் இல்லை.

2) இரத்தனசாமி செட்டியார் மற்றும் அவரது குடும்பம் தஞ்சையில் தான் இருந்தார்கள் என்றால் 1970 ஆம் வருடம் வரை இங்கு தான் இருந்தார்கள், அதன் பிறகு தஞ்சை சென்று விட்டார்கள்.இரத்தனசாமி செட்டியாருக்கு எத்தனை மகன்கள் என்றால் 4 மகன்கள் முறையே, முத்துசாமி செட்டியார், ராமநாதன் செட்டியார், பாலசுப்பிரமணியன் செட்டியார், சந்திரசேகர். இரத்தனசாமி செட்டியார் இறந்த பின்னர் அவரது சொத்துகளை அவரது மகன்கள் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்து கொண்டது எனக்கு தெரியும் என்றால் 1983 ஆம் வருடம் பாகம் பிரித்துக் கொண்டது தெரியும். அவ்வாறு பாகம் பிரித்து கொண்டதற்கு ஏதேனும் ஆவணம் எழுதி கொண்டார்களா என்றால் சொத்து பிரிக்கப்பட்டு விட்டது, ஆவணங்கள் எழுதியுள்ளார்கள், நான் அதை பார்க்கவில்லை.

3) அந்த பாகப்பிரிவினையில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது அதன் சர்வே எண்கள் என்ன என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்து தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில், வாதியின் தந்தை ராமநாதன் 2021 ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்று சொல்லியிருப்பது சரிதானா என்றால் சரிதான். வாதிக்கு வாரிசு அடிப்படையில் தாவா சொத்து சொந்தம் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4) வாதிக்கு வாரிசு அடிப்படையில் தாவா சொத்து சொந்தம் என்பதற்கோ அல்லது வாதியின் தந்தைக்கு வாரிசு அடிப்படையில் தாவா சொத்து சொந்தம் என்பதற்கோ ஏதேனும் ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. வாதியோ வாதியின் தகப்பனாரோ இந்த சொத்தை அனுபவம் செய்தார்கள் என்று சொல்லியுள்ளேன்,அதற்கு ஏதேனும் ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை.

5) வழக்கு சொத்தில் ஆஸ்பெட்டாஷ் சீட் போட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் தாவா சொத்து இருக்கும் இடத்திற்கு கடைசியாக நான் சென்றது எப்போது என்றால் ஒரு வருடம் இருக்கும். அப்போதாவது அந்த வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்பதை பார்த்தேனா என்றால் நான் கவனிக்கவில்லை. அந்த வீட்டில் பிரதிவாதி மங்கையற்கரசி குடியிருக்கும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டிற்கு பஞ்சாயத்தில் வரிவிதிப்பு ஏற்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வரிவிதிப்பும் பிரதிவாதி மங்கையற்கரசி பெயரில் தான் ஏற்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

6) தாவா சொத்தில் , யார் பெயரில் மின் இணைப்பு உள்ளது, யார் குடியிருந்து வருகிறார் என்ற விபரங்கள் தெரியாமல் வாதி சுரேந்தர் கேட்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் வாதி தான் அனுபவம் செய்து வருகிறார். சமீபத்தில் அந்த சொத்தில் யார் குடியிருந்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் 2000 ஆம் வருடம் தாவாகிராமத்தில் பஞ்சாயத்து கிளர்க்காக இருந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பஞ்சாயத்து தலைவர் அருணகிரி, துணைத்தலைவர் வடிவேல் கோனார். அந்த சமயத்தில் பஞ்சாயத்து கிளர்க்காக இருந்த சமயத்தில் இவ்வழக்கின் பிரதிவாதி மங்கையற்கரசிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த லெனின்க்கும் இந்த சொத்து தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பிரச்சனையின் போது நான் பஞ்சாயத்து தலைவர் அருணகிரி, துணைத்தலைவர் வடிவேல் கோனார் ஆகியோர் காவல் நிலையத்தில் ஆஜராகி தாவா சொத்து மங்கையற்கரசி அனுபவத்தில் தான் இருக்கிறது என்று எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் ஞாபகத்தில் இல்லை. நான் எழுதிக்கொடுத்துவிட்டு வழக்கிற்காக தற்சமயம் ஞாபகத்தில் இல்லை என்று பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

7) எனக்கு மூல அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தஞ்சை அனு மருத்துவமனையில் செய்யப்பட்டது என்றால் இல்லை, மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செய்யப்பட்டது. வாதி சுரேந்தர் எனது உறவினர் என்றால் சரிதான். அவர் தஞ்சை அனு மருத்துவமனையில் மருத்துவராக உள்ளார் என்றால் சரிதான். நான், என் மனைவி, அனைவரும் அவரிடம் தான் வைத்தியம் பார்ப்போம் என்றால் சரிதான். நான், என் மனைவி, அனைவரும் அவரிடம் தான் வைத்தியம் பார்ப்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக

அவருக்காக உண்மையை மறைத்து தாவா சொத்து அவர்களுடைய அனுபவத்தில் இருந்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு தெரிந்த வரை 50 வருடம் அவர்கள் அனுபவத்தில் தான் இருந்தது. நான் சொல்வது போல் தாவா சொத்து எந்த காலத்திலும் வாதியின் அனுபவத்திலோ அல்லது அவரது தந்தை அனுபவத்திலோ அல்லது அவரது தாத்தாவின் அனுபவத்திலோ இல்லை என்றால் சரியல்ல. வாதியோ வாதியின் தகப்பனாரோ அவரது தாத்தாவே எந்த காலத்திலும் தாவா கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல.

8) தாவா சொத்து ஆரம்பம் முதல் இன்றைய தேதி வரை பிரதிவாதி மங்கையற்கரசி அவர்தான் அனுபவம் செய்து குடியிருந்து வருகிறார் என்றால் தெரியாது, யார் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் ஒரு பகுதியில் ஏற்கனவே நாட்டு செக்கு இருந்தது என்றால் இருந்திருக்கலாம், எனக்கு தெரியாது. மங்கையற்கரசியின் கணவர் எண்ணெய் ஆட்டி விற்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஏற்கனவே பிரதிவாதி, நாட்டு செக்கு போட்டு எண்ணெய் ஆட்டியும் இன்னொரு பகுதியில் குடியிருந்தும் வந்தார்கள் நான் சொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) என் வீடு உள்ள இடத்திற்கும் தாவா இடத்திற்கும் 2 கி.மீ. தொலைவு இருக்குமா என்றால் இல்லை, 2 கி.மீ. தள்ளி இருந்தது. தாவா சொத்திற்கு அடுத்த மேற்கு புறம் கலியன் செட்டியார் வீடு உள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னுடைய முதல் விசாரணையில் தாவா சொத்திற்கு மேற்கால் முருகையா வீடு உள்ளது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், கலியன் செட்டியாருக்கு அடுத்து மேற்கு முருகையா வீடு உள்ளது. எனக்கு தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.